# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Caste | : |
| Father's Name | : மல்லநாய்க்கர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 8th May 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கேத்தநாய்க்கனூரில் வசித்து வருகிறேன். நான் ஜெயராமபுரம் கிராமத்தில் கஸ்தூரிபாய் கிராம தொடக்க பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கஸ்தூரிபாய் தேசிய நினைவு அறக்கட்டளையின் பேரில் எங்கள் பள்ளி செயல்பட்டு வருகிறது. அதில் S.N. பாலசுப்பிரமணியன் என்பவர் செயலராக பணிபுரிந்து வந்தார். அவர் தற்போது இறந்து விட்டார். தேவராஜ் என்பவர் தற்போது செயலாளராக உள்ளார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக அப்போது இருந்தார். 17.11.2014ம் தேதியில் இடைநிலை பள்ளி ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். அதுமுதல் 2016ம் ஆண்டு வரை என் பணி ஒப்புதல் ஆணை மாவட்ட கல்வி அலுவலகத்தில் இருந்து வரவில்லை. ஆனால் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலைய பள்ளியின் சார்பாக எனக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நான் பணிபுரிந்து வந்தேன்.

2. மேற்படி கஸ்தூரிபாய் கிராம உயர்நிலைய பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்த எதிரி என்னுடைய பணி அனுமதி சம்பந்தமாக அலுவலகத்திற்கு சென்று வருவதற்கும், கஸ்தூரிபாய் அறக்கட்டளைக்கு பணம் செலுத்தவேண்டும் என்றும் சொல்லி என்னிடம் 11.06.2016ம் துவக்கபள்ளி அலுவலகத்தில் வைத்து முதல் தவணையாக ரூ.75,000/-மும், பின்னிட்டு 15.06.2016ல் இரண்டாவது தவணையாக ரூ.50,000/-உயர்நிலை பள்ளியில்

வைத்து கொடுத்தேன். 29.07.2016 ல் எனக்கு பணி ஆணை ஒப்புதல் பெறப்பட்டது. நான் மேற்கண்ட காலத்தில் பணிபுரிந்ததற்கு நிலுவை சம்பள தொகை ரூ.5,60,468/− எனக்கு நிர்வாகத்தின் சார்பில் கொடுத்தார்கள். மேற்படி பணத்தில் இருந்து கஸ்தூரிபாய் உயர்நிலைபள்ளி அறக்கட்டளை நிர்வாகத்திற்கு செலுத்தவேண்டும் என்று கூறி ரூ.4,10,000/− எனது நிலுவை சம்பள தொகையில் இருந்து பெற்றுக்கொண்டார். இரசீது தருவதாக சொல்லி இருந்தார். நீண்ட நாட்களாக இரசீது கேட்டும் கொடுக்கவில்லை.

3. நான் கொடுத்த பணத்திற்கு இரசீது கேட்டேன், இரசீது கொடுக்கவில்லை. விசாரித்தபோது தான் பல நபர்களிடம் மேற்படி எதிரி நன்கொடை என்று சொல்லி வசூல் செய்தது தெரியவந்தது. அவர் இரசீது கொடுக்காததால் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.5,35,000/− நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்னேன். அதற்கு அவர் நன்கொடையாக எதிரி என்னிடம் பெற்ற ரூ.5,35,000/− அவர் நிர்வாகத்திடம் பணம் கொடுக்கவில்லை என்று கூறினார் அது எனக்கு தெரியவந்தது. உடனே நான் எழுத்துமூலமாக செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் எழுத்துமூலமாக எதிரி மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் அது தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேலும், நான் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.5,35,000/− நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்ன பிறகு மேற்படி செயலாளர் அவர்கள் வேறு யாரிடமாகவது மேற்படி எதிரி இதுபோல் பணம் வசூல் செய்துள்ளாரா என என்னுடன் பணியில் சேர்ந்த மற்ற ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில் எதிரி வசூல் செய்த பணம் எதுவும் நிர்வாகத்தின் வசம் ஒப்படைக்கவில்லை என தெரியவந்தது. இதுசம்பந்தமாக நிர்வாகம் சார்பில் எதிரி மீது புகார் கொடுத்து அந்த புகார் சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பில் போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**
**மறு விசாரணை இல்லை.**

**ஒம்/−சாட்சி** செல்வராஜ்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி தாலுாக்கா.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

## CC.No. 45/2024

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : சதீஸ்குமார் | Caste | : |
| Father's Name | : துரைசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 8th May 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது அரச்சலூாரில் வசித்து வருகிறேன். நான் கஸ்துாரிபாய் கிராமத்தில் கஸ்துாரிபாய் கிராம உயர்நிலை பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கஸ்துாரிபாய் தேசிய நினைவு அறக்கட்டளையின் பேரில் எங்கள் பள்ளி செயல்பட்டு வருகிறது. அதில் S.N. பாலசுப்பிரமணியன் என்பவர் செயலராக பணிபுரிந்து வந்தார். அவர் தற்போது இறந்துவிட்டார். தேவராஜ் என்பவர் தற்போது செயலாளராக உள்ளார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் பள்ளியில் தலைமை ஆசிரியராக அப்போது இருந்தார். நான் மேற்படி கஸ்துாரிபாய் கிராம உயர்நிலைய பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் தற்காலிகமாக பணிபுரிந்து வந்தேன். மேற்கொண்ட சூழ்நிலையில் 2015ம் ஆண்டு நான் ஈரோடு மதராஸ பள்ளியில் நிரந்தர ஆங்கில ஆசிரியராக பணியில் சேர்ந்தேன். பின்னிட்டு விருப்ப மாறுதலில் கஸ்துாரிபாய் பள்ளிக்கு ஒருபுல பெயர்வு அடிப்படையில் வந்தேன்.

2. மேலும் அந்த சமயத்தில் 2017 ம் ஆண்டு வாக்கில் எதிரி என்னிடம் நிர்வாகத்திற்கு நன்கொடையாக பணம் கொடுக்கவேண்டும், என்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கவேண்டும் என்றால் பணம் தரவேண்டும் என்று 2017ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அரச்சலூார் பஸ் நிறுத்ததில் வைத்து எதிரியிடம் ஒரு தவணையாக ரொக்கமாக ரூ.5லட்சம் கொடுத்தேன். அப்போது

என்னுடன் செல்வராஜ் என்பவர் இருந்தார். நான் கொடுத்த பணத்திற்கு இரசீது கேட்டேன், இரசீது கொடுக்கவில்லை. விசாரித்தபோது தான் பல நபர்களிடம் மேற்படி எதிரி நன்கொடை என்று சொல்லி வசூல் செய்தது தெரியவந்தது. நான் கொடுத்த நன்கொடைக்கு இரசீது கேட்டேன். அவர் இரசீது கொடுக்காததால் கஸ்துாரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.5லட்சம் நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்னேன். அதற்கு அவர் நன்கொடையாக எதிரி என்னிடம் பெற்ற ரூ.5லட்சம் அவர் நிர்வாகத்திடம் பணம் கொடுக்கவில்லை என்று கூறினார் அது எனக்கு தெரியவந்தது. உடனே நான் எழுத்துமூலமாக செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் எழுத்துமூலமாக எதிரி மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் அது தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேலும், நான் கஸ்துாரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.5லட்சம் நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்ன பிறகு மேற்படி செயலாளர் அவர்கள் வேறு யாரிடமாகவது மேற்படி எதிரி இதுபோல் பணம் வசூல் செய்துள்ளாரா என என்னுடன் பணியில் சேர்ந்த மற்ற ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில் எதிரி வசூல் செய்த பணம் எதுவும் நிர்வாகத்தின் வசம் ஒப்படைக்கவில்லை என தெரியவந்தது. இதுசம்பந்தமாக நிர்வாகம் சார்பில் எதிரி மீது புகார் கொடுத்து அந்த புகார் சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிதரப்பில் போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறு விசாரணை இல்லை.**

**ஒம்/–சாட்சி** சதீஸ்குமார்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி தாலுாக்கா.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திகேயன் | Caste | : |
| Father's Name | : பழனிசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 8th May 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**
**முதல் விசாரணை:**

நான் தற்போது கவுந்தபாடிக்கு அருகில் உள்ள ராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கஸ்தூரிபாய் கிராமத்தில் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். கஸ்தூரிபாய் தேசிய நினைவு அறக்கட்டளையின் பேரில் எங்கள் பள்ளி செயல்பட்டு வருகிறது. அதில் S.N. பாலசுப்பிரமணியன் என்பவர் செயலராக பணிபுரிந்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் பள்ளியில் தலைமை ஆசிரியராக அப்போது இருந்தார். நான் மேற்படி கஸ்தூரிபாய் கிராம உயர்நிலைய பள்ளியில் பணியிடம் காலி உள்ளதாக செய்தித்தாள் விளம்பரத்தை பார்த்து நான் அதற்காக விண்ணப்பம் செய்தேன். அதன் அடிப்படையில் எனக்கு நேர்முக தேர்வில் கலந்து கொண்டு பணி நியமனம் பெற்று 11.04.2014 ல் பணியில் சேர்ந்தேன். ஆசிரியர்அல்லா பணியிடத்தை தற்போது நிரப்பக்கூடாது என்று ஈரோடு மாவட்ட கல்வி அதிகாரிகளின் உத்தரவின்பேரில் பள்ளி நிர்வாகம் சார்பில் ஆசிரியர் அல்லா பணியிடத்தை நிரப்பக்கூடாது என்ற மாவட்ட கல்வி அதிகாரி அவர்களின் உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் என் பணி நிரந்தரம் செய்யப்பட்டது.

2. மேலும் அந்த சமயத்தில் 28.02.2018 ம் தேதியில் அப்போது அங்கு தலைமை ஆசிரியராக பணிபுரிந்த பெரியசாமி அவர்கள் என்னிடம் கஸ்தூரிபாய் அறக்கட்டளை நிர்வாகத்திற்கு நன்கொடை கொடுக்கவேண்டும் என்று சொல்லி ரொக்கமாக ரூ.1,50,000/–த்தை ஈரோடு ஸ்டேட் பேங்க் தலைமை அலுவலகத்தில் வைத்து மேற்படி எதிரியிடம் கொடுத்தேன். சில மாதங்களுக்கு பிறகு நான் கொடுத்த நன்கொடைக்கு இரசீது கேட்டேன். அவர் இரசீது கொடுக்காததால் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.1,50,000/– நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்னேன். அதற்கு அவர் நன்கொடையாக எதிரி என்னிடம் பெற்ற ரூ.1,50,000/– அவர் நிர்வாகத்திடம் பணம் கொடுக்கவில்லை என்று கூறினார் அது எனக்கு தெரியவந்தது. உடனே நான் எழுத்துமூலமாக செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் எழுத்துமூலமாக எதிரி மீது புகார் கொடுத்தேன். அந்த புகாரில் மேற்படி எதிரி என்னிடம் மிரட்டி ஏமாற்றி வாங்கிய தொகை ரூ.1,50,000/– எனக்கு பெற்றுதருமாறும் பாதுகாப்பு கோரியும் ஒரு புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் அது தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேலும், நான் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.1,50,000/– நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்ன பிறகு மேற்படி செயலாளர் அவர்கள் வேறு யாரிடமாகவது மேற்படி எதிரி இதுபோல் பணம் வசூல் செய்துள்ளாரா என என்னுடன் பணியில் சேர்ந்த மற்ற ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில் எதிரி வசூல் செய்த பணம் எதுவும் நிர்வாகத்தின் வசம் ஒப்படைக்கவில்லை என தெரியவந்தது. இதுசம்பந்தமாக நிர்வாகம் சார்பில் எதிரி மீது புகார் கொடுத்து அந்த புகார் சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**ஒம்/–சாட்சி** கார்த்திகேயன்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி தாலுாக்கா.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : வசந்தி | Caste | : |
| Husband's Name | : கந்தசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 8th May 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சின்னதாண்டாம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கஸ்துாரிபாய் கிராமத்தில் கஸ்துாரிபாய் கிராம உயர்நிலை பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 07.03.2018 முதல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆணையின் பேரில் திறமையின் அடிப்படையில் பணிக்கு சேர்ந்தேன். கஸ்துாரிபாய் தேசிய நினைவு அறக்கட்டளையின் பேரில் எங்கள் பள்ளி செயல்பட்டு வருகிறது. அதில் S.N. பாலசுப்பிரமணியன் என்பவர் செயலராக பணிபுரிந்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் பள்ளியில் தலைமை ஆசிரியராக அப்போது இருந்தார். மேலும், மேற்படி எதிரி என்னிடம் நிரந்தாகவும், நிம்மதியாகவும் பணிபுரிய வேண்டும் என்றால் கஸ்துாரிபாய் உயர்நிலை பள்ளி நிர்வாகத்தின் வளர்ச்சிக்காக நன்கொடையாக பணம் ரூ.6லட்சம் என்னிடம் கேட்டார். நான் 2 தவணைகளாக 02.04.2018 ம் தேதியில் முதல் தவணையாக கந்தசாமிபாளையம் சூர்யா பேக்கரியில் நானும் எனது கணவரும் சென்றோம் அங்கிருந்த ஆஜர் எதிரியிடம் ரூ.4லட்சம் பணம் ரொக்கமாக கொடுத்தேன். சூர்யா பேக்கரியில் வேலை செய்யும் சுப்பிரமணி என்பவர் அங்கிருந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை.

2. 04.06.2018 ம் தேதி மீண்டும் சூர்யா பேக்கரியில் வைத்து ஆஜர் எதிரியிடம் ரூ.2லட்சம் பணம் ரொக்கமாக கொடுத்தேன். நன்கொடைக்கு உண்டான இரசீது கேட்டேன். அவர் கொடுக்கவில்லை. மேலும் ரூ.2 லட்சம்

என்னிடம் எதிரி கேட்டபோது எனக்கு சந்தேகம் ஏற்பட்டதால் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.6லட்சம் நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்னேன். அதற்கு அவர் நன்கொடையாக எதிரி என்னிடம் பெற்ற ரூ.6லட்சத்தை அவர் நிர்வாகத்திடம் பணம் கொடுக்கவில்லை என்று கூறினார் அது எனக்கு தெரியவந்தது. உடனே நான் எழுத்துமூலமாக செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் எழுத்துமூலமாக எதிரி மீது புகார் கொடுத்தேன். அந்த புகாரில் மேற்படி எதிரி என்னிடம் மிரட்டி ஏமாற்றி வாங்கிய தொகை ரூ.6லட்சத்தை எனக்கு பெற்றுதருமாறும் பாதுகாப்பு கோரியும் ஒரு புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் அது தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேலும், நான் கஸ்தூரிபாய் கிராம உயர்நிலை பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணி அவர்களிடம் சென்று பணம் ரூ.6லட்சம் நான் எதிரியிடம் கொடுத்ததை சொன்ன பிறகு மேற்படி செயலாளர் அவர்கள் வேறு யாரிடமாகவது மேற்படி எதிரி இதுபோல் பணம் வசூல் செய்துள்ளாரா என என்னுடன் பணியில் சேர்ந்த மற்ற ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில் எதிரி வசூல் செய்த பணம் எதுவும் நிர்வாகத்தின் வசம் ஒப்படைக்கவில்லை என தெரியவந்தது. இதுசம்பந்தமாக நிர்வாகம் சார்பில் எதிரி மீது புகார் கொடுத்து அந்த புகார் சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**ஒம்/—சாட்சி** வசந்தி

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி தாலுாக்கா.